# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No.324/2021

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw3/Pw4 |
| Name | : Rathinasamy |
| Father/Husband's Name | : Periyasamy |
| Village | : |
| Taluk | : Erode |
| Calling | : |
| Age | : 71 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07.11.2025.

**முதல் விசாரணை:**

நான் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். துயம் பூந்திரையை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் என்னுடைய மகளான அசா.3 கலாவதிக்கு ரயில்வேவில் வேலை வாங்கி தருவதாக ஆஜர் எதிரிகளான நித்யானந்தம் மற்றும் தேவேந்திரன் ஊரப்பாக்கத்தில் உள்ள அவர்களின் வீட்டிற்கு 17.03.2015 அன்று காலை 10-10.30 மணியளவில் சென்றோம். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் வீட்டில் இருந்தார்கள். அப்போது ராஜேந்திரன் ஆஜர் எதிரிகளை அறிமுகம் செய்து வைத்தார். அதன் பின்னர் நாங்கள் நித்யானந்தம் வீட்டில் இருந்தபோது, ஆஜர் எதிரி நித்யானந்தம், ரயில்வே உயர்அதிகாரி எனது வீட்டிற்கு இப்போது வருவார் என்று சொன்னார். அவ்வாறே ஒருவர் அவர் வீட்டிற்கு வந்த போது, நித்யானந்தம் அவர் பெயர் வெங்கடேசவர ராவ் என்றும் அவர் தான் ரயில்வேவில் வேலை வாங்கி தருவதாக எங்களிடம் சொன்னார். பின்னர் அவர் எங்களிடம் வேலை சம்பந்தமாக பேசிவிட்டு, எங்களிடம் ஒரு படிவத்தை கொடுத்தார். மேற்படி படிவத்தை அசா.3 எனது மகளை பூர்த்தி செய்ய சொன்னார். அப்போது நித்யானந்தம் பணம் ரூ.3 லட்சம் எடுத்து வந்தீர்களா என்று கேட்டார். நாங்களும் எடுத்து வந்திருக்கிறோம் என்று கூறி, நாங்கள் வைத்திருந்த ரூ.3 லட்சம் பணத்தை நித்யானந்தமிடம் கொடுக்க அவர் அதனை பெற்று அருகில் இருந்த வெங்கடேசவர ராவ்விடம் கொடுத்தார். பணம் பெற்றதற்கான எவ்வித

அத்தாட்சியும் இல்லை என்று சொன்னபோது, நானும் ஈரோட்டுகாரன் தான் என்னை நம்புங்கள் என்று நம்பிக்கை வார்த்தை சொன்னார். மேற்கொண்டு ரயில்வேவில் பதவி பெறுவதற்காக ரூ.15 லட்சம் செலவாகும் என்று சொன்னார். அவ்வளவு பணம் எங்களால் தர முடியாது என்று சொன்னபோது, பிறகு ரூ.12 லட்சம், ரூ.10 லட்சம், பின்னர் கடைசியாக ரூ.8 லட்சம் கொடுத்தால் போதும் வேலை வாங்கி தருவதாக சொன்னார். பின்னர் அரச்சலூர் SBI கிளையின் எனது வங்கி கணக்கின் 77015 கணக்கிலிருந்து 20.03.2015 ம் தேதி ரூ. 3 லட்சமும், பின்னர் 23.03.2015 ம் தேதி 40,000/-, 40,000/- மாக 5 முறை மொத்தமாக ரூ. 2 லட்சமும், பணத்தை ஆஜர் எதிரி நித்யானந்தம் வங்கி கணக்கிற்கு நான் அனுப்பினேன். தற்போது நித்யானந்தின் வங்கி கணக்கு எந்த வங்கி என்று ஞாபகமில்லை. பின்னர் ரயில்வே துறையில் பணி நியமன ஆணை கொடுத்தார்கள். மேற்படி பணி நியமன ஆணை ரயில்வே துறையில் காண்பித்த போது, அது போலி என்று கூறினார்கள். பின்னர் இது சம்பந்தமாக கூடுவாஞ்சேரி காவல்நிலையத்தில் எனது மகள் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை:**

நான் 23.03.2015ம் தேதி நித்யானந்தம் வங்கி கணக்கில் பணம் அனுப்பிவிட்டு உடனே ஏன் சென்னை கிளம்பி சென்றேன் என்றால் அதே தேதியில் வரவில்லை. நித்யானந்தம் மகன் தேவேந்திரனுக்கு வேலை வாங்கி தருவதாக வெங்கடேசவர ராவ்விடம் பணம் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 27.03.2015ம் தேதி காரை வைத்து எதிரிகள் இருவரையும் அழைத்து சென்று, மிரட்டினேன் என்றால் இல்லை எனது மகள் வேலை செய்யும் கார்மெண்ட்ஸ் ஓனரிடம் சொன்னேன். பகல் 1 மணியளவில் நித்யானந்தம் மற்றும் தேவேந்திரன் ஆகியோர்களை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றோம் என்றால் நேரம் எனக்கு தெரியாது. நித்யானந்தம் மகன் மீது எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆஜர் எதிரிகள் பணம் வாங்கி கொடுத்ததால் அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்தேன். நான் எவ்வகையான பணம் நோட்டுகளை யாரிடம் கொடுத்தேன் என்றால் எவ்வகையான பணம் என்று ஞாபகமில்லை. ஆனால் நித்யானந்தமிடம் கொடுத்தேன். நான் வெங்கடேசவர ராவ்விடம் எவ்வாறு பேசினேன் என்றால் நான் அவரிடம் நேரிடையாக பேசவில்லை அவர்கள் பேசி கொண்டிருந்ததை கேட்டேன். எனக்கு சிறிதளவு தெலுங்கு தெரியும். ராஜேந்திரன் முலமாக தான் நித்யானந்தம் தெரியும். நித்யானந்தம் முலமாக தான் வெங்கடேசவர ராவ்வை தெரியும் என்றால் சரிதான். ராஜேந்திரன் பணம் கொடுத்ததால் தான் நம்பிக்கையின் பேரில் நான் நித்யானந்தமிடம் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். நித்யானந்தம் வெங்டேசவர ராவ் முலம் வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் சரிதான். வேலை வாங்கி

தருவது மோசடி என்று தெரிந்தவுடன் நித்யானந்தமிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. உடனடியாக கூடுவாஞ்சேரி காவல்நிலையம் சென்றுவிட்டேன். எனது மகள் வேலை செய்யும் இடத்தின் ஓனர் முலமாக காவல்நிலையம் சென்றுவிட்டோம். நித்யானந்த்தை காரில் அழைத்து வரும்போது அவரின் லேப்டாப், மொபைல் மற்றும் அவரது மனைவியை அடித்து அழைத்து வந்த விவரம் தெரியுமா என்றால் கூடுவாஞ்சேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் நித்யானந்த்தை அழைத்தார். நான் காரில் சென்று அவரின் வீட்டை அடையாளம் காட்டினேன். நான் நித்யானந்தமிடம் பணம் கொடுத்து, வெங்கடேசவர ராவ்விடம் பணம் கொடுத்து வேலை வாங்கி தராமல் மோசடி செய்து தான் எனது புகார் என்றால் சரிதான். வெங்கடேசவர ராவ் எங்களை ஏமாற்றிவிட்டார் என்று தெரிந்தும், நித்யானந்தமும், வெங்கடேசவர ராவ்விடம் பணம் கொடுத்து ஏமாந்த விவரம் தெரிந்தும், நித்யானந்தமிடம் பணம் பறிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நித்யானந்தம் தபால் துறையில் Accountant ஆக வேலை செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் பிறகு தான் தெரிய வந்தது. வெங்கடேசவர ராவ்விடம் பேசி, அவர் மீது நம்பிக்கை ஏற்பட்டதன் பேரில் தான் நித்யானந்தமிடம் பணம் கொடுத்து, வெங்கடேசவர ராவ்விடம் பணம் கொடுத்தேன் என்றால் இல்லை. காவல்நிலையத்தில் ஆஜர் எதிரிகளும், வெங்கடேசவர ராவ்விடம் பணம் கொடுத்து ஏமாந்த விவரத்தை சொன்னார்களா என்றால் இல்லை. ராஜேந்திரன் என்னிடம் புகார் கொடுக்க வேண்டாம் என்றாலும், ஆஜர் எதிரிகளும், வெங்கடேசவர ராவிடம் அவர்களின் பணத்தை கொடுத்து ஏமாந்துவிட்டார்கள் என்று காவல்நிலையத்தில் சொன்னாரா என்றால் இல்லை.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

sd/-S.Sahaana

Judicial Magistrate No.II,
Chengalpattu.